பக்கங்கள் 19+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 15 வியாழக்கிழமை 31.07.2025 | அதிர்வு 364

## யாழ். விபத்தில் வயோதிபர் பலி

யாழ்ப்பாணத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கிளிநொச்சியில் டிப்பர் மோதி பெண்ணொருவர் உயிரிழப்பு!

### சாரதி ஊைகயப்புடைப்பு

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை டிப்பர் மோதி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பரந்தன் பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரம் யதுகிரி (வயது 31) என்ற பெண்ணே உயிரிழந்தார். 02





### இனியபாரதியால் கடத்திக் கொல்லப்பட்டோர் புதைக்கப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும்

# தம்பிலுவில் மயானத்தில் தோண்டும் நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

இனியபாரதி தலைமையில் கடத்தப்பட்டுக் காணாமல்போன 18 வயது மாணவன் பார்த்தீபன், முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் சு.ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் 02





# லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் மனைவி மரணம்; கணவர் படுகாயம்

### கினிகத்தேனையில் அதிகாலை துயரம்





(க.கிஷாந்தன்)

கொழும்பு, மருதானையில் இருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த லொறியை முந்திச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற 02



# சிவில் பாதுகாப்புப் படைச் சிப்பாய் காட்டு யானை தாக்கி உயிரிழப்பு!

அநுராதபுரம் – கல்னேவ, சியம்பலன்கம பகுதியில் காட்டு யானை தாக்கி சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் சேனபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட 44 வயதுடைய சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஆவார்.

கல்னேவ நெகம்பஹா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யானை மின்சார வேலிப் பாதுகாப்புக் கடமைக்கு வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தம்பிலுவில்...

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் இந்து மயானத்தில் தோண்டும் நடவடிக்கை இன்று வியாழக்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

கருணாவின் கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளருமான கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரைத் திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் திருக்கோவில் மற்றும் மட்டு. சந்திவெளி பகுதிகளில் வைத்து சி.ஐ.டியினர் கைது செய்தனர்.

இவர்களுடன் இனியபாரதியின் சகாக்களான முன்னாள் சாரதி செந்தூரன், திருக்கோவில் – விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்னேஸ்வரன், வெலிகந்தை – தீவுச்சேனையைச் சேர்ந்த பாலிகிருஷ்ணன் சபாபதி மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் என அழைக்கப்படும் ரமேஸ்கண்ணா ஆகியோரையும் சி.ஜ.டியினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையின் அடிப்படையில் கடந்த 2009ஆம் ஆண்டு ஜூலையில் திருக்கோவில் – விநாயகபுரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவன் பார்த்தீபன், 2006 டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், 2010 ஜனவரி 26ஆம் திகதி ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு தம்பிலுவில் இந்து மயானத்தில் புதைக்கப்பட்டனர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சி.ஜ.டியினர் கைது செய்யப்பட்டவர்களை தம்பிலுவில் இந்து மயானத்துக்குக் கடந்த இரு தினங்களாக அழைத்துச் சென்று புதைக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்தினர்.

இதற்கமைய அந்த மயான இடத்தைத் தோண்டி சோதனை செய்வதற்கு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் சி.ஜ.டியினர் அனுமதி கோரியதையடுத்து நீதிவான் ஏ.எல்.எம்.றிஸ்வான் முன்னிலையில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் என அழைக்கப்படும் ரமேஸ்கண்ணா அடையாளம் காண்பிக்கும் இடத்தை பைக்கோ இயந்திரம் கொண்டு இன்று பிற்பல் 2 மணிக்குத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்போது அங்கு இதுவரை எந்தவிதமான உடற்பாகங்களும் மீட்கப்படவில்லை.

இதேவேளை, அந்தப் பகுதியில் மக்கள் திரண்டு நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

### லொறி - மோட்டார் சைக்கிள்...

மேற்படி பெண்ணின் கணவர் படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தில் உயிரிழந்தவர் கொழும்பு, மருதானையைச் சேர்ந்த 44 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாயார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை, மில்லகஹமுல பகுதியில் இன்று அதிகாலை 5:45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உறவினரைப் பார்வையிட இந்தத் தம்பதியினர் மோட்டார் சைக்கிளில் சென்றனர்.

இதன் போது, கொழும்பில் இருந்து வட்டவளை நோக்கிச் சென்ற லொறியை மோட்டார் சைக்கிள் சாரதி முந்திச் செல்ல முயன்ற போது, லொறியின் இடது பக்கத்தின் நடுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சிக்கிக் கொண்டது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் இருந்த பெண் லொறியின் இடது பின்புற சக்கரத்தின் கீழ் வீழ்ந்து நசுங்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளின் சாரதியின் கவனக்குறைவே விபத்துக்குக் காரணம் என்றும், எனினும் சந்தேகத்தின் பேரில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் சட்ட மருத்துவ பரிசோதகரிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கிளிநொச்சியில்...

கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை, பின்னால் வந்த டிப்பர் முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் விபத்தை ஏற்படுத்திய சாரதி பொதுமக்களால் தாக்கப்பட்டார். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழ். விபத்தில்...

முல்லைத்தீவு, உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த இளையதம்பி நந்தகுமார் (வயது 70) என்பவரே உயிரிழந்தார்.

முல்லைத்தீவில் இருந்து அச்சுவேலிப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வயோதிபர் வந்தார். அவர் கடந்த 27ஆம் திகதி உறவினர் வீட்டுக்கு அருகில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவரை மீட்டு, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்!

செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரியும், ஐ.நா. பேரவையின் நிபுணர் குழு செம்மணி புதைகுழி அகழ்வை மேற்பார்வை செய்ய வேண்டும் என் கோரியும் வடமராட்சி தெற்கு மேற்கு – கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழிக்காக செய்யப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளும் தீர்மானமாக சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்கு – கரவெட்டி பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டு மூன்றாவது அமர்வில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளில் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பதினொரு தீர்மானங்களும் கரவெட்டிப் பிரதேச சபையின் தவிசாளர் குமாரசாமி சுரேந்தின் ஊடக அறிக்கை மூலம் மக்களின் தகவல் அறியும் உரிமைக்குட்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அதில தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரியும், ஐ.நா. பேரவையின் நிபுணர் குழு செம்மணி புதைகுழி அகழ்வை மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் செம்மணி மனித புதைகுழிக்காக செய்யப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளும் தீர்மானமாக சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எள்ளங்குளம் மயானத்தின் 1.220 ஏக்கர் காணியை இராணுவம் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளது. ஆகவே அந்த காணியில் இருந்து இராணுவம் விலகி பொது மக்களின் பயன்பாட்டுக்கு மயானத்தைக் கையளிக்கக் கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எள்ளங்குளம் மயானத்தைச் சுற்றியுள்ள ஒன்பது உரிமையாளர்களின் 2.03 ஏக்கர் பரப்பளவை உடைய தனியார் காணிகளை ஆத்து மீறி ஆக்கிரமித்துள்ள இராணுவம் விலகி காணி உரிமையாளர்களிடம் கையளிக்க கோருவதுடன் அனுமதியின்றி செய்யும் வியாபார நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு கனகரக வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்கு பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரமாகிய காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையிலும் பாடசாலை முடியும் நேரமாகிய பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரையிலும் எமது சபைக்கு உட்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள வீதிகளால் கனரக வாகனங்கள் பயணிப்பதைத் தடைசெய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

“சுத்தமான பிரதேசத்தை உருவாக்குவோம்” என்ற எண்ணக்கருவுக்கு அமைய எமது சபைக்கு உட்பட்ட வீதியோரங்களில் காணப்படும் பற்றைகள் புற்களை அகற்ற வேண்டும் என்றும் ஆர்.டி.ஏ., ஆர். டி. டி. வீதிகளில் காணப்படும் பற்றைகள், புற்களை அகற்ற அவர்களிடம் கோரிக்கை விடுவதென்றும் பராமரிக்காமல் காணப்படும் காணிகளது உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மலக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக சுத்திகரிப்புக் கட்டமைப்பொன்றை நிறுவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மறைந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் அழகையா துரைராசா வின் நினைவாக உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் அவரின் சிலை அமைப்பதற்காக சபை சிபாரிசு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எமது சபைக்கு உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களிலும் திருமண மண்டபங்களிலும் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வீதிகளில் கழிவுகளை வீசுபவர்களை இனங்கண்டால் அவர்களிடம் இருந்து அதற்கான கழிவகற்றல் செலவீனத்தை அறவீடு செய்வதென்றும் அதற்கு அவர்கள் உடன்படாதவிடத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொது இடங்கள், காணிகளுக்குள் பிளாஸ்ரிக் பொருள்களைப் போடுவதனால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்களை தடுப்பதற்காக எமது சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து பிளாஸ்ரிக் சேகரிப்பு திட்டத்தை ஆரம்பித்து அதிகளவான பிளாஸ்ரிக் சேகரிக்கும் மாணவர்களுக்கு சபையால் பரிசில் வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. விபத்துக்கள் ஏற்படுவதால் அதனை எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.– என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கல்லுளி மங்கன் ட்ரம்ப்

கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலின் தொடக்கத்தில், 'கல்லுளி மங்கன் போனவழி காடு மலையெலாம் தவிடு பொடி' என்ற உவமையுடன் ஒரு சொலவடை அமைந்திருக்கும். கல்லுளி மங்கன் என்பது 'பிடிவாதக்காரன்' அல்லது 'முரட்டுப்பிடிவாதம் உடையவன்' என்பதைக் குறிக்கும்.

சர்வதேச உறவாடலில் தான் வாய் வைத்த தரப்பு எல்லாவற்றுடனும் முரட்டுத்தனமாகக் கருத்து வெளியிடும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இத்தகைய கல்லுளி மங்கன் போலவே தோற்றுகின்றார்.

தன் பக்கத்தில் இருந்த தன் அயல் தேசங்கள், தனது நேட்டோ கட்டமைப்பு நாடுகள் என்று எல்லாவற்றையும் தன் கல்லுளி மங்கன் தனத்தால் முட்டி மோதி, உறவுகளை நாசமாக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இப்போது இந்தியாவுடனும் அதே பாணியில் வாய் வைத்திருக்கிறார்.

பல நாடுகளில் இருந்தும் அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது அதீத வரி விதித்த டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவுக்கு 25 சதவீத வரிவிதிப்பு நாளை ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று கூறியிருக்கிறார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எரிபொருளைக் கொள்ளளவு செய்வதை ஒட்டிக் கடுப்பில் இருக்கும் அதிபர் ட்ரம்ப் ''ஒரு நாள் பாகிஸ்தான் இடமிருந்து எரிபொருள் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரும்'' என்று பகிரங்கமாகச் சீண்டும் விதத்தில் கூறி அடுத்த சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றார். இது சர்வதேச அளவிலும், இந்திய அரசியலிலும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில், "நாங்கள் இப்போதுதான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப் பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பாக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்." எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும் ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு பாகிஸ்தான் தரப்பில் இருந்து உடனடியாக எவ்வித பிரதிபலிப்பும் தெரிவிக்கப்படவில்லை.

முன்னதாக, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், பாகிஸ்தானின் கடல் பகுதியில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவின் குறிப்பிடத்தக்க இருப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில், பாகிஸ்தான் கடல் பகுதியில் கண்டறியப்பட்ட எண்ணெய் வளம், உலகளவில் நான்காவது பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், ட்ரம்பின் இன்றைய சமூக வலைதளப் பதிவு, அந்தச் செய்தியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றது.

அது மட்டுமல்லாது, ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் இந்திய, ரஷ்யப் பொருளாதாரங்களை 'டெட் எக்கானமி', அதாவது மிக மோசமான நிலையில், மீட்க முடியாத சூழலில் இருக்கும் - சாகும் - பொருளாதாரம் என்று குறிப்பிட்டுள்ளார். "இந்தியா, ரஷ்யாவுடன் என்ன மாதிரியான செயல்களில் ஈடுபடுகிறது என்பது பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால். இரண்டு நாடுகளும் தங்களின் மோசமான பொருளாதார நிலையை இணைந்து இன்னும் மோசமாக்கும்." என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

'இந்தியா - பாகிஸ்தான் போரை நானே நிறுத்தினேன்' என்று கூறியமை, இந்தியாவுக்கு 25 வீத இறக்குமதி வரி விதிப்போடு, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதற்காக அபராதம் விதித்தமை, தற்போது பாகிஸ்தானில் மிகப்பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்குவதாகவும், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம் என்றும் அடுத்தடுத்துக் கூறி இந்தியாவை சீண்டி வருகிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இந்தியா இதற்கு எப்படி எதிர்வினையாற்றப் போகின்றது? பொறுத்திருந்து பார்ப்போம்.



# பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை இடம்மாற்றத் தீர்மானம் நிறைவேற்றம்!

## ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டது

பருத்தித்துறை மரக்கறி சந்தையை இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் பருத்தித்துறை நகர சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர மரக்கறிசந்தை விவகாரம் தொடர்பில் நேற்று (30) புதன்கிழமை சபை அமர்வில் விவாதிக்கப்பட்டது.

தற்போதைய புதிய மரக்கறி சந்தையை நகரின் மையப் பகுதியான நகர சபை சந்தைக் கட்டட தொகுதிக்கு மாற்றுவது எனவும், முதலில் கீழ்த் தளத்துக்குக் கொண்டுவருவது தொடர்பான சாத்திய ஆய்வைப் பட்டய பொறியியலாளர் தலைமையில் நகர புத்திஜீவிகள் நலன்விரும்பிகளை இணைத்து ஒரு குழுவை அமைத்து மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அது சாத்தியமாயின் அதை நடைமுறைப்படுத்துவது எனவும் அவ்வாறு அது சாத்தியமில்லை எனின் சந்தை கட்டத்தின் மேற்தளத்துக்கு மரக்கறி சந்தையை கொண்டு செல்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாக ஏழு வாக்குகளும் எதிராக ஆறு வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒருவர் சபை நடவடிக்கையில் பங்கேற்று வெளியேறியிருந்தார். நகர பிதா டக்ளஸ் போல் தலைமையில் தமிழ்த் தேசிய பேரவை பருத்தித்துறை நகரசபை ஆட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் மாநகர சபையின்

# வேலைப் பகுதிக்குத் தேவையான 'கிரைண்டர்கள்' வழங்கினார் சாரூபன்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் வேலைப் பகுதிக்குத் தேவையான நான்கு 'கிரைண்டர்கள்' இன்று (31) யாழ். மாநகர சபை முதல்வர் திரு மதி மதிவதனி விவேகானந்தராசாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரக் குழுத் தலைவர் சி. சாரூபன் தனது சொந்த நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா செலவில் இவற்றைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சி மன்றங்களைத் திணைக்களமாக நடத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது அரசு!

## சுவிஸ் தூதுவரிடம் தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு



உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரப் பகிர்வுக்கான ஆட்சி முறை என்ற நிலையை ஏற்றுக் கொள்ளாது சாதாரண திணைக்களங்கள் போல் அணுகப்படும் நிலைமை காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய மற்றும் மாகாண கட்டமைப்பில் இருந்து அதிகாரங்களை நிலை நிறுத்துவது கடினமான விடயமாகவே உள்ளது.

இவ்வாறு சுவிசர்லாந்து தூதுவருடனான சந்திப்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிசர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ட் தலைமையிலான குழுவினர் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (29) யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே தாம் இவ்வாறு தெரிவித்தார் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிதாக உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களை அரசு வலுப்படுத்தும் வகையில் சர்வதேச அனுபவங்களைப் பெற்று மத்திய அரசு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் சாதாரணமான உள்ளூராட்சி மன்றங்களை ஓர் திணைக்களம் போன்றே மத்திய அரசு அணுகும் தன்மை காணப்படுகின்றது. இதற்குப் பின் அதிகாரங்களைப் பகிர மறுக்கும் மத்திய அரச கொள்கை நிகழ்ச்சி நிரல் உள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தியையும் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் நாம் சமமாகவே முன்கொண்டு செல்ல முயற்சிக்கின்றோம்.

இந்த விடயத்தில் உள்ளூராட்சியைப் பலப்படுத்த தங்கள் போன்ற நாடுகளின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. உள்ளூராட்சி மன்றங்களின் பணிப்பரப்புக்களை ஏனைய நாடுகள் போல முன்னெடுக்க அதிகாரங்கள் வலுப்படுத்தப்படவேண்டும். மாறாக அரசு மத்தியை நோக்கி அதிகாரங்களை குவிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றது.

தமிழ் மக்களில் பெருமளவானோர் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் ஊடான முதலீடுகளை பெற்று தொழில்துறை ரீதியிலான அபிவிருத்திகளை போரால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும். எனினும் அரசு தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறலையோ நீதியையோ நிலைநிறுத்தாமை காரணமாக புலம்பெயர் முதலீட்டாளர்கள் தாயகம் திரும்ப அஞ்சுகின்றனர்.

எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறலுக்கு உள்நாட்டில் நீதியை ஒருபோதும் பெற்றுவிட முடியாது என்பதை கடந்த போருக்குப் பின்பான காலந்தாழ்தல்கள், அனுபவங்கள் வாயிலாக முடிவு செய்துள்ளோம்.– என்று கூறியதாகத் தெரிவித்தார்.





# விவசாயம், கடற்றொழிலின் உற்பத்திகளை பெறுமதிசேர் பொருள்களாக மாற்ற வேண்டும்

## அதற்குத் தொழிற்சாலைகள் அவசியம் என்கிறார் ஆளுநர்

ஏற்றுமதியை அதிகரிக்காமல் வருமானத்தை உயர்த்த முடியாது. ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமானால், வடக்கு மாகாணத்தின் மிகச்சிறந்த வளமாக உள்ள விவசாயம் மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருள்களை பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றும் தொழிற்சாலைகள் உருவாக்கப்படவேண்டும். தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவதன் ஊடாக எமது வேலைவாய்ப்பு பிரச்சினையையும் தீர்க்கக் கூடியதாக இருக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கம், யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்துடன் இணைந்து வட மாகாணத்தில் ஏற்றுமதிக்குத் தயாரான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலை அரியாலை 'ஜே ஹெஸ்ட் ஹோட்டலில்' நடத்தியது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது பிராந்தியத்தின் ஏற்றுமதி சுற்றுச்சூழலை வலுப்படுத்த ஒரு பகிரப்பட்ட தொலைநோக்கு பார்வையுடன் ஒன்றிணைந்த இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கம், யாழ்ப்பாண மேலாளர்கள் மன்றம், வடக்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட மாகாணம், மனிதத் திறமை, விவசாய பன்முகத்தன்மை, பாரம்பரிய கைவினைத்திறன் மற்றும் வளர்ந்து வரும் தொழில்முனைவோர் தளத்தால் நிறைந்துள்ளது. இருப்பினும், சந்தை அணுகல், தரச் சான்றிதழ் மற்றும் சிறு உற்பத்தியாளர்களை வெற்றிகரமான ஏற்றுமதியாளர்களாக மாற்றக்கூடிய வெளிப்பாடு ஆகியவற்றில் நாங்கள் நீண்ட காலமாக சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.




இந்த முயற்சி ஒரு மாற்றத்தக்க வாய்ப்பைக் குறிக்கிறது. இந்த வியாபாரத்திலிருந்து வியாபாரம் மூலம் ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், ஆதரவு நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குநர்களை ஒன்றிணைப்பதன் மூலம், நாங்கள் பின்வரும் அடிப்படைகளை அமைத்துக்கொடுக்க முயல்கின்றோம்.

நேரடி வணிக இணைப்புகள், அறிவுப் பகிர்வு மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஏற்றுமதி – தயார்நிலை ஆதரவு.

இத்தகைய இலக்கு தலையீடுகள் தற்போதுள்ள இடைவெளிகளைக் குறைக்கும் மற்றும் வடக்கில் உற்பத்தியாளர்கள் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்ய, செயற்பாடுகளை அதிகரிக்க மற்றும் அவர்களின் சந்தைகளை பல வகைப்படுத்த உதவும்.

இது பொருள்களை ஏற்றுமதி செய்வது மட்டுமல்ல – இது மீண்டும் கட்டியெழுப்பவும் செழிக்கவும் உறுதிபூண்டுள்ள ஒரு பிராந்தியத்திலிருந்து நம்பிக்கை, புதுமை மற்றும் மீள்தன்மையை ஏற்றுமதி செய்வது பற்றியதாகவும் அமைகின்றது.

விவசாய வணிகம் முதல் கடல்வளம் வரை, பாரம்பரிய கைவினைப் பொருள்கள் முதல் தொழில்நுட்ப சேவைகள் வரை, நமது உள்ளூர் தொழில்களின் வலிமையை பயன்படுத்திக் கொள்ளுமாறு வருகைதரும் அனைத்து ஏற்றுமதியாளர்களையும் முதலீட்டாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் வழிகாட்டுதல், நிபுணத்துவம் மற்றும் தொடர்பாடல்கள் மூலம், வடக்கில் ஒரு துடிப்பான ஏற்றுமதி சமூகத்தை உருவாக்க முடியும்.

இந்தச் செயற்பாட்டுக்கு எமது மாகாண சபை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என உறுதிப்பட இங்கு நான் தெரிவிக்கின்றேன். தடைகளை நீக்கவும், உள்கட்டமைப்பை வழங்கவும், ஒரு உகந்த கொள்கை சூழலை உருவாக்கவும் தேசிய ஏற்றுமதியாளர் சங்கம், மற்றும் அனைத்து பங்குதாரர்களுடனும் நாங்கள் கைகோர்த்து செயற்படுவோம்.

தற்போதைய அரசும் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கியே கூடுதல் கவனம் செலுத்துகின்றது. அவ்வாறானதொரு சாதகமான சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சாதாரண ஒருவரும் எந்தவொரு தடைகளும் இல்லாமல் ஏற்றுமதியை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக அதற்கான பொறிமுறையை உருவாக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றோம்.– என்றார்.

நிகழ்வில் ஏற்றுமதியாளர்களுக்கான நூல் ஒன்றும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், தேசிய ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் றோட்டரிக் கழகத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஆளுநர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



### உற்பத்தித் திறனை அதிகரித்தால்

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்த முடியும்!

## ஹேலிஷ் நிறுவன பெருந்தோட்ட முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)

உற்பத்தித் திறனை அதிகரித்தால் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்க முடியும் என்று ஹேலிஷ் நிறுவனத்தின் பெருந்தோட்ட முகாமைத்து பணிப்பாளர் ரொஷான் இராஜதுறை தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்க முடியும். இருந்தாலும் தேயிலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பட்சத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியும்.

ஹேலிஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கும் களனிவெளி, தலவாக்கலை, ஹொரான ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களின் சிறந்த உத்தியோகத்தர்களுக்கான விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஹட்டன் பிரீன்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எந்த ஒரு வியாபாரத்தையும் எடுத்துக்கொண்டால் அதில் இலாபம் ஈட்டித்தரகூடியதாக இருக்க வேண்டும். கடந்த முறை பாரிய கஷ்டத்துக்கு மத்தியில் 1350 ரூபா சம்பளத்தை வழங்க இணக்கப்பாடு தெரிவித்தோம். நாங்கள் தான் அதிகமான வேதனத்தை வழங்குகிறோம்.

தேயிலையின் விலை 2000 ரூபா வரை அதிகரிக்குமாக இருந்தால் இவர்கள் கோரும் தொகையை வழங்க முடியும். அரசால் முன்னெடுத்து செல்லும் தோட்டங்கள் இது போன்ற வேதனங்களை வழங்க முடியாது. சிறுதோட்ட தொழிலாளர்கள்தான் இன்று அதிகமான தேயிலையை உற்பத்தி செய்கின்றனர். அவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 50 ரூபா மாத்திரம் கிடைக்கிறது. எந்த ஒரு சலுகைகளும் வழங்குவதில்லை அண்மையில் நான் பார்த்தேன் சில தோட்டங்களில் ஒரு லட்சத்துக்கு மேல் சம்பளம் பெற்றிருந்தார்கள்.

வேலை செய்யும் தொழிலாளர்கள் சிறந்த வேதனத்தைப் பெறமுடியும். ஆனால் தொழிலாளர்கள் தொழிலுக்கு வருவது குறைவடைந்துள்ளது. முன்பு போல் தற்போது இல்லை. தொழிலாளர்கள் குறைவாக காணப்படுவதால் அதிகமான தேயிலைக் கொழுந்தைப் பறிக்கமுடிவதில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நூற்றுக்கு பத்து வீதம் இலாபத்தை வழங்குகிறோம். வேறு எந்த ஒரு தொழில் துறையிலும் இலாபத்தை பிரித்து கொடுப்பதில்லை. நாங்கள் அரசியல் செய்வதில்லை. நாங்கள் பொறுப்பான ஒரு நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்கிறோம். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இவ்வாளவு தொகை தான் வழங்க முடியும் என்பதையும் நாங்கள் அறிவித்துள்ளோம். நான் சவால் விடுகிறேன். நாங்கள் செய்வது பிழை என்று கூறினால் நாங்கள் தோட்டங்களை தருகிறோம். நடத்துங்கள்.- என்றார்.



# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவையை மேம்படுத்த ஒத்துழைப்பேன்!

## திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சசிகுமார்



(றியாஸ் ஆதம்)

திருக்கோவில் ஆதார வைத்திய சாலையின் பௌதீக வளங்களை அபி விருத்தி செய்வதற்கும் அதன் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கும் ஒத் துழைப்புக்களை வழங்கி செயற்படு வேன் என்று திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தெரித்தார்.

திருக்கோவில் ஆதார வைத்திய சாலையின் அடிப்படை வசதிகள் மற் றும் சேவைகளை மேம்படுத்தும் நோக் கில், வைத்திய அத்தியட்சகர் டொக் டர் ஏ.பி.மசூத்தின் அழைப்பின் பேரில் தவிசாளர் சசிகுமார் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் குறித்த வைத் தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட னர்.

வைத்தியசாலையின் நிலமை களை நேரில் பார்வையிட்ட தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் அதன் பௌதீக வளப்பற்றாக்குறை உட்பட அங்கு கடமை யாற்றும் உத்தியோகத்தர்கள் ஊழி யர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் வைத்திய அத்தியட்ச கரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

பொதுமக்களின் நலனைக் கருத் தில் கொண்டு, வைத்திசாலையின் சேவையை மேம்படுத்துவதற்குத் தன்னா லான உதவிகளை செய்வார் என்றும் இதன்போது தவிசாளர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து வைத்தியசாலை யின் பௌதீக வள செயற்பாடுகளை மேம் படுத்தும் பொருட்டு பின்வரும் செயற் றிட்டங்களை முன்னெடுப்பது தொடர் பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்தில் காணப்படும் தேவையற்ற சிறிய மரங்கள் மற்றும் கற்களை அகற்றி நிலத்தை ஒழுங்கமைத்தல், மழை காலங்களில் தேங்கும் வெள்ள நீரை வெளியேற்ற வடிகான் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வைத்தியசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் புதிதாக மின் விளக்குகளைப் பொருத்தி வெளிச் சத்தை ஏற்படுத்துதல், பாதைகளை விஸ்தரித்தல், வைத்தியசாலைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கத் தேவையான உப கரணங்களைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு விடங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# வேலணையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி அமிர்தலிங்கம் இராசமணி யின் நினைவாக பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட 55 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலர் கா. பார்த் தீபன் தலைமையில் பிரதேச செய லக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.





# கழிவகற்றல் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டார் பிரதேச சபைத் தவிசாளர்

**(றிபாஸ்)**

சம்மாந்துறை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இயற்கை கழிவகற்றல் சுத்திகரிப்பு நிலையத்தை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் நேரில் சென்று பார்வையிட்டார்.

நிலையத்தின் செயற்பாடுகள், தற்போதைய நிலை மற்றும் சேவையின் தரம் குறித்தும், பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம். முஸ்தபாவிடம் கேட்டறிந்து கொண்டார்.

சபையால் சேவைக் கட்டண அடிப்படையில் சேகரிக்கப்படும் இயற்கை கழிவுகள், மூலம் சுத்திகரிக்கப்பட்டுச் சுத்தமான நீராக மாற்றப்படுவதையும் பார்வையிட்ட அவர் மேலதிக தேவைகள் குறித்தும் கலந்துரையாடினார்.



# இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார பிரிவுடன், விசன்ஸ் குளோபல் எம்பவர்மமன்ற் மற்றும் இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனங்கள் இணைந்து, உயர்தரக் கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சியை வவுனியாவில் நடத்தின.

வவுனியாவின் மகாரம்பையில் அமைந்துள்ள வடமாகாண தகவல் தொடர்பாடல் மத்திய நிமையத்தில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த 17 பாடசாலைகளைச்சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.






# கடற்கரையை அழகுபடுத்திய இராணுவத்தினர்!

(பா.சதீசன்)

வலயர்மடம் கடற்கரையில் இருந்து முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்கரை வரை 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் இராணுவம், பொதுமக்கள் இணைந்து சுத்தப்படுத்தியுள்ளனர்.

59 படைப்பிரிவின் ஊடாக 593 பிரிக்கேட் கீழ் ஆறாவது தேசிய பாது காப்பு படையணியைச் சேர்ந்த இராணு வத்தினர், பொது மக்களுடன் இணைந்து வலயர்மடம் கடற்கரையில் இருந்து முள்ளிவாய்க்கால் கிழக்குக் கடற் கரைவரை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சுத்தப்படுத்தும் பணியில் கோம்பா வில் பொது சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன், உடையார்கட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரகாஸ், கிராம மக்கள், இராணுவத்தினர் இணைந்து கடற்கரையைச் சுத்தப்படுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது.







# ஆளுமையுடைய மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்...!

- ந.கோபிராம் -
(உளவியல்துறை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

பாடசாலை மாணவர்களுக்கான ஆளுமை விருத்தி மேம்பாட்டு உத்திகள் ஆளுமை என்பதை ஒருவரிடம் காணப்படும் உடற் கவர்ச்சியின் அளவு என்று பலர் எண்ணுகின்றனர். அத்துடன் பிறரை காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ, திறனிலோ மிகச் சிறந்து விளங்குவதைச் சிறந்த ஆளுமை உடையவன் அல்லது உடையவள் என்கின்றனர்.

ஆனால் ஆளுமை தனியே இவ்வாறு அமைவதில்லை. அது பரந்துபட்ட விளக்கத்தைத் தரக்கூடியது. பொதுவாக ஆளுமை என்பது ஒருவர் பெற்ற உடல், உள, சமூக பண்புகள், மனப்பான்மைகள், மனநிலைகள் எல்லாம் இணைந்தது ஆகும். இது ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணப்படுவதுடன் மக்களின் உறவுகள், சமுதாய குழுக்கள், சுற்றுச் சூழல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் போன்றவற்றின் ஊடாகத் தம்மைத் தேர்ச்சி அடைய செய்வதே கல்வியின் பிரதான நோக்காகும். இவர்களை சமூகத்தில் நல்ல ஆளுமை மிக்க நபராக உருவாக்குவதில் பாடசாலையின் பங்கு அளப்பரியது.

பாடசாலை மாணவர்கள் எனும் போது அவர்கள் 5 முதல் 18 வயது வரை கல்வி கற்பவர்களாக

தொடர்ச்சி▼

# ஆளுமையுடைய மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்...!

தொடர்ச்சி▲

காணப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி நன்மைகளை ஏற்படுத்தினாலும் கூட சவால்களையும், போட்டி மிக்க நெருக்கடி சூழலையும் உருவாக்கி உள்ளது. இவ்வாறான நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஆளுமையை வளப்படுத்துவது அவசியம். பிரதானமாக பாடசாலை மாணவர்கள் ஆளுமையை உரிய முறையில் விருத்தி செய்து மேம்படுத்திக் கொள்வதன் ஊடாக பல சவால்களையும் எதிர் கொண்டு சாதிக்க வழிவகை செய்கின்றது.

அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் ஆளுமை (பண்புத்திறன்) விருத்தியை மேம்படுத்த உதவும் உத்திகளை நாம் பார்ப்போம்.

சுய முன்னேற்றப் பயிற்சிகள்

மாணவர்களை சுயமாக கற்றலை (Self-directed learning) மேற்கொள்ள ஊக்குவித்தல் பிரதானமாகின்றது. பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வி நடவடிக்கையின் போது அது தவிர்ந்த பிற சூழல்களிலும் (வீடு, தனியார் கல்வி நிலையங்கள்) இந்தச் சுயகற்றல் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது. அத்துடன் தோல்விகள், தவறுகள் விடும் சந்தர்ப்பங்களில் அதிலிருந்து கற்றுக்கொள்ளும் மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளும் போது மாணவர்கள் தம் சுய நம்பிக்கை, சுயவிழிப்புணர்வு என்பன விருத்தி அடைந்து அவர்களின் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### இணைப் பாடவிதான செயற்பாடுகள்

தனியே பாடத்துறை சார்ந்த கற்றலை மேற்கொள்வதினால் மட்டும் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. இணைப் பாடத்தின் ஊடாகச் சமூக நடத்தை, பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்வதுடன் சமூகத்துக்கு ஏற்ற வகையில் வழிப்படுத்த உதவுகின்றது.

பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டி, சாரணர் இயக்கம் முதலானவற்றில் ஆர்வத்துடன் பங்கு பெறுதல் மற்றும் செயற்றிட்டங்கள் (கண்காட்சி, சிரமதானம், சுற்றுலா) பங்குபற்றுவதன் ஊடாக புதிய அனுபவங்கள், உற்சாகம், பொருந்தி வாழும் தன்மை, சேர்ந்து இயங்கும் தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, தலைமைத்துவ பண்பு என்பன ஏற்படுகின்றது.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் (இலக்கியப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், வினாடி வினாப் போட்டிகள், கலைப் போட்டிகள், பட்டிமன்றங்கள்) முதலானவற்றில் ஈடுபடுவதன் ஊடாக ஆளுமை விருத்தி மேம்பாடு அடைகின்றது.

### நல்ல உறவுகளை உருவாக்குதல்

மாணவர்களுக்கு நல்ல நட்புகளை உருவாக்கி, அவற்றை கையாளக் கற்றுக் கொடுக்க வேண்டும். நல்ல நட்பானது சீரான வழிகாட்டலுக்கும், வெற்றிக்கும் உறுதுணையாகி அமை




வது மட்டுமல்லாது பிரச்சினைகள் அல்லது தடைகள் நோக்கி செல்லாது நேர்வழியில் செல்ல வழிகாட்டுகின்றது. மற்றும் உள்ளூர், சர்வதேச மாணவர்களுடன் பரஸ்பர கலந்துரையாடல்களை (Exchange Programs) ஊக்குவிப்பதன் ஊடாகவே மொழி பரிமாற்றம், தொடர்பாடல் விருத்தி, கலாச்சார விருத்தி ஏற்படுவதுடன் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

நெறிப்படுத்தல் நடவடிக்கை

நேரம் எம் வாழ்வில் மிக முக்கியமாகின்றது. நேர மேலாண்மை (Time management) சரியாக பேணுவதன் ஊடாக பல விடயங்களை சரிவரச் செய்யவும், பல இன்னல்களைத் தவிர்க்கவும் உதவுகின்றது. நேரமேலாண்மையானது அன்றாட செயல்பாடுகளுக்கு நன்றாகவே உதவுகின்றது. எம் வாழ்வின் இலக்கை நிர்ணயித்து நடைமுறைப்படுத்துவதிலும் இதன் பங்கு அளப்பரியது.

### தொழில்நுட்ப வளர்ச்சி

ஆரம்பத்தில் கூறியது போல் இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி தடுக்க முடியாதாகி விட்டது. இவ்வாறான போட்டி உலகில் எமக்கு இவை பற்றிய அறிவை மேம்படுத்தும் போது ஆளுமை நன்றாவே விருத்தியடைந்து செப்பனிடப்படுகின்றது. Computer Skills, Online Tolls பயன்பாடு, தொழில்நுட்ப கற்றல் முறைகள் (E-learning Platforms) கையாள்வதல், AI [Aritificial intelligence] பற்றிய அறிவு என்பன முக்கியமாகின்றன.

### சமூக தொடர்பு திறன் மேம்பாடு

தொடர்ச்சி▼

# ஆளுமையுடைய மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்...!

**தொடர்ச்சி▲**

மாணவர்களுக்கு மக்களுடன் நெருங்கி இடை வினை (தொடர்பு) கொள்ளும் நிலை தற்போது உலகில் குறைவாகவே காணப்படுகின்றது. இவ் வாறான சந்தர்ப்பங்களில் ஆளுமை பாதிப் படையும். அதனால் மக்களுடன் நெருங்கிப் பழகி (Inter Personal Skills) மற்றும் (Communication Skills) உரையாடல் திறன், நம்பகத்தன்மை (Assertiveness), முறை சார் உரையாடல் (Formal Commuication) ஏற்படுத்திக் கொள்வதின் ஊடாக ஆளுமை விருத்தி மேம்படுகின்றது.

### உளநல மேம்பாடு (மனநல மேம்பாடு)

தவறான உந்துதல்கள் மற்றும் தூண்டல்கள், தீய பழக்க வழக்கங்களை பின்பற்றுவதை தவ- ிர்த்தல், சரியான மனவளர்ச்சியை கையாளுதல்,



அதாவது சூழ்நிலைக்கு ஏற்ப உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்தல். இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை உளவளத்துணை யாளரின் வழிகாட்டல் சிறந்தது. அத்துடன் பாரபட்சம், மூடநம்பிக்கைகளை தவிர்த்து அனைவரிடமும் அன்பு, நட்புடன் பழகுவதன் ஊடாக உளநலம் மேம்படுவதுடன் ஆளுமை விருத்தியும் அதிக ரிக்கின்றது.

### தன்னம்பிக்கையை வளர்த்தல்

பாடசாலைகளில் மாணவர்களின் திறன்களை பாராட்டுதல் மற்றும் ஊக்கப்படுத்தலின் மூலமாக தன்னம்பிக்கை வளர்கின்றது. மாணவர்கள் பங்கு பெறும் சிறு சிறு போட்டிகள், ஏன் நல்ல செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களிலும் வாழ்த்துதல், கைதட்டுதல், புகழ்தல் என்பன மூலம் அவர்களின் தன்னம்பிக்கையை மேலும் அதிகரிக்க முடியும்.

### பரிந்துரைகள், வழிகாட்டல்

முதியோர்களிடமிருந்து மற்றும் ஆசிரியர் களிடம் இருந்து அவர்களின் கருத்துக்கள் மற்றும் வழிகாட்டல்களை மதித்து நடப்பது நல்லது. அது மட்டுமல்லாது வல்லுனர் பேச்சுகள் (Expert Talks) மற்றும் தொழில் முனைவோர்களின் சந்திப்புகள் முதலானவற்றில் பங்கு கொள்வதன் மூலம் ஆளுமை மேம்படுகின்றது.

### ஆரோக்கியமான வாழ்க்கை முறை வழிகாட்டல்

உடல் நலம், உள நலத்தை பேணும் பழக்க வழக்கங்களை கற்பது சிறந்தது. தினசரி உடற் பயிற்சி செய்தல் மற்றும் யோகாசனம், தியானம், இஸ்ட தெய்வ வழிபாடுகள், இனிய இசை கேட்டல் என்பன மனதை ஒருநிலைப்படுத்த உதவுகின்றது. மனஅழுத்தத்தை (Stress) குறைக்கவும் இவை உதவுகின்றது.

### திறன் வளர்ச்சி நடவடிக்கைகள்

குழுவேலை (Team Work) மூலம் தலைமைத் துவம் (LearderShip) மற்றும் ஒத்துழைப் புத் திறன் வளர்கின்றது. குழுச்செயற்பாட்டின் போது ஒற்றுமை, விட்டுக் கொடுப்புடன் பொறுப் புணர்வும் ஏற்படுகின்றது. தனிநபர் மற்றும் குழு அடிப்படையிலான திறன் பேச்சு (Pubilc Speaking) மற்றும் சிந்தனையாழ்வு (Critical Thinking) பயிற்சிகளை அதிகம் கற்றுக் கொள்வதன் ஊடாக ஆளுமை விருத்தி நன்றா கவே மேம்பாடு அடைகின்றது.

### உதவும் திறன் வளர்ப்பு

முதலில் தனக்குத்தானே உதவும் திறன் உடையவராக இருத்தல் வேண்டும். தன்னை செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் மட்டுமன்றி தனக்குத்தானே உதவுபவராக காணப்படுதல் நன்று. அத்துடன் வகுப்பறை குழுச்செயற் பாடுகளில் மாணவர்களை தமக்குத் தாமே உதவும் குழுவுடன் இணைத்தல் மூலம் இவர்களிடம் இந்தப் பண்பு வளர்கின்றது. இதனால் ஆளுமை விருத்தி அடைகின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட உத்திகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களின் மத்தியில் ஆளுமை விருத்தி அடைந்து சமூகத் தில் ஆளுமை மிக்க நபராக திகழ வழிவகை செய்கின்றது.

# மீனவர் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் வழிகாட்டல்






**(எம். எப்.நவாஸ்)**

அட்டாளைச்சேனை கடற்கரைத் துறை மீனவ சங்கத்தின் ஒருங்கிணைப்பில் சங்க உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான முற்தடுப்பு வழிகாட்டல் நிகழ்வு மீனவர் வாடி முற்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதியாக கலந்து சிறப்புரையாற்றிய அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கரிடம் மீனவர்கள் எதிர்கொள்ளும் வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாகப் பல முக்கியமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

பிரதேச செயலக அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தடுப்பு நடவடிக்கைகள் சிகிச்சை மற்றும் உளவளத் துணை சேவைகள் குறித்த வழிகாட்டல்களும், இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதியம் தொடர்பான விழிப்புணர்வும் சம்பந்தப்பட்ட துறைசார் உத்தியோகத்தர்களால் விரிவாகவும் விளக்கமாகவும் வழங்கப்பட்டது.





# நாமக்கல் முகாமிலுள்ள இலங்கையர்கள் 10 நாள்களுக்குள் வெளியேற வேண்டும்

## இந்திய அதிகாரிகள் அறிவித்தல்

தமிழகத்தின் நாமக்கல் மறுவாழ்வு முகாமில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள், தங்களது நாட்டிலிருந்து 10 நாள்களுக்குள் வெளியேற வேண்டும் அல்லது விசாக்களை புதுப்பிக்க வேண்டும் என்று இந்திய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம், பரமத்தி வேலூரில் உள்ள பொலிஸ், அவர்களுக்கு இது தொடர்பில் எழுத்துப்பூர்வ அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இதன்படி முகாமில் உள்ள 62 பேர் பல ஆண்டுகளுக்கு முன்னர் சுற்றுலா விசாக்களில் தமிழகத்துக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன் முகாம்களில் ஏலவே தங்கியிருந்த அவர்களின் உறவினர்களுடன் தங்கிவிட்டனர்.

அவர்கள் விசாக்களை புதுப்பிக்கவோ அல்லது இலங்கைக்குத் திரும்பவோ முயற்சிக்காமல் பதிவின்றி சட்டவிரோமாக முகாமிலேயே தங்கி விட்டனர்.

இதில் சிலர் இலங்கைக்கு மீண்டும் சென்று முகாமுக்கு திரும்பி வந்துள்ளனர்.

இந்தநிலையில், காஷ்மீர் - பஹல்காம் தாக்குதல்களை அடுத்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ளவர்களை வெளியேற்றும் செயற்பாடுகளுக்கு அமையவே, தற்போதைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னரும் இதுபோன்ற உத்தரவுகள், அதிகாரிகளால் வாய்மொழி மூலம் கூறப்பட்டாலும் கூட, தற்போது இந்த உத்தரவு கடுமையாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தாம் கருதுவதாக நாமக்கல் மறுவாழ்வு முகாமில் உள்ள இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் மேற்படி அகதிகள், நீண்ட கால விசாக்களுக்கு விண்ணப்பித்து இங்கு சட்டப்பூர்வமாகத் தங்க வேண்டும் என்பதே தங்களது விருப்பம் என்று இந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில், இலங்கை அகதிகள் தொடர்பான விடயங்களைக் கையாளும் வெளிநாட்டுத் தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நலத்துறை ஆணைக்குழுவிடம், தங்களது சொந்த நாட்டுக்குச் செல்ல விரும்பும் இலங்கையர்கள் குறித்த தகவல்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், அவ்வாறு மறுவாழ்வு முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளில், இந்தியக் குடியுரிமையைக் கோரியுள்ளவர்கள் தொடர்பான தகவல்களும் அந்த ஆணைக்குழுவிடம் இல்லை என்று இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# தெற்காசிய நீல புரட்சிக்கு வித்திடும் முதலாவது தானியங்கி ஆழ்கடல் துறைமுகம் ‘விழிஞ்ஞம்’

சர்வதேச பன்னோக்கு சரக்கு கப்பல் போக்குவரத்தால் தெற்காசியாவின் நீல புரட்சிக்கு வித்திடும் இந்தியாவின் முதல் ஆழ்கடல் தானியங்கி துறைமுகமாக கேரளாவின் விழிஞ்ஞம் துறைமுகம் முத்திரை பதித்து வருகிறது.

சர்வதேச கடல் மார்க்கத்தில் ஐரோப்பா, பாரசீக வளைகுடா, மற்றும் டுபாய், சிங்கப்பூர் போன்ற மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் கடல் சார் மேலாண்மைக்கான இந்திய நுழைவுவாயிலாக உள்ள கேரளாவின் விழிஞ்ஞம் தானியங்கி துறைமுகம் கடந்த மே மாதம் பிரதமர் மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

உலக வர்த்தகத்தில் இந்திய கடல் பயணத்தில் மகத்தான அத்தியாயத்தை தொடங்கியுள்ள இந்த துறைமுகம் சர்வதேச கடல் எல்லையில்



இருந்து 10 நாட்டிக்கல் மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு துறைமுகத்துக்கு அருகாமையில் புவியியல் ரீதியாக இயற்கையாகவே 18 முதல் 20 மீட்டர் ஆழம் கொண்ட இந்தியாவின் ஆழமான துறைமுகமாக விழிஞ்ஞம் உருவெடுத்துள்ளது.

இதனால் சுமார் 24 ஆயிரத்து 500 கண்டெய்னர்களை சுலபமாக ஏற்றி, இறக்கிச்செல்லும் எம்.எஸ்.சி. அரினா போன்ற சர்வதேச பிரமாண்ட சரக்கு கப்பல்கள் கூட இங்கு வந்து எளிதாக சரக்கு போக்குவரத்தை கையாளும் வகையில் அனைத்து செயல்பாடுகளும் தானியங்கி முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கேரள அரசு, மத்திய அரசு மற்றும் அதானி குழுமத்தின் கூட்டு முயற்சியால் பொது - தனியார் கூட்டாண்மை பங்களிப்புடன் சுமார் 8 ஆயிரம் கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த துறைமுகத்தில் சோதனை முயற்சியாக கடந்த 2024 ஜூலை முதல் தற்போது வரை 415 சரக்கு கப்பல்கள் வந்து சென்றுள்ளன.

முதற்கட்ட பணியில் 10.50 லட்சம் கண்டெய்னர்களை கையாளும் வகையிலும், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது கட்ட விரிவாக்கப் பணிகள் மூலமாக சுமார் 45 லட்சம் கண்டெய்னர்களை கையாளவும் திட்டமிடப்பட்டுள்ளது.



# உக்ரைன் இராணுவப் பயிற்சித் தளம் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்; 3 பேர் பலி

உக்ரைன் இராணுவப் பயிற்சித் தளத்தின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், அந்நாட்டின் 3 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர். 18 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் செர்னிஹிவ் பகுதியில் அமைந்திருந்த இராணுவப் பயிற்சி மையத்தின் மீதே ரஷ்யா நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தியுள்ளது.

இதுகுறித்து, ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கூறுகையில், செர்னிஹிவ் மாகாணத்தின், ஹொரான் சாரிவ்ஸ்கே பகுதியில் அமைந்திருந்த உக்ரைனின் 169 ஆவது இராணுவப் பயிற்சி மையத்தின் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில், ஸ்காந்தர் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அதனால், சுமார் 200 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டிருக்கவோ அல்லது படுகாயமடைந்திருக்கவோ வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யா மக்கள் குடியிருப்புகள் அதிகமுள்ள பகுதிகளின் மீது தனது தாக்குதல்களை அதிகரித்துள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

மேலும், 78 ட்ரோன்கள், 8 அதிநவீன போர் விமானங்கள் ஆகியவை மூலம் உக்ரைன் நகரங்களின் மீது, நள்ளிரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில், 5 பேர் படுகாயமடைந்துள்ளனர் என உக்ரைனின் விமானப் படை தகவல் வெளியிட்டுள்ளது.















# கடுமையான நில நடுக்கத்தின் போதும் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்கள்

ரஷ்யாவில் சக்தி வாய்ந்த நில அதிர்வு ஏற்பட்ட போதும், மருத்துவர்கள் நோயாளிக்குத் தொடர்ந்து அறுவை சிகிச்சை செய்யும் காணொலி இணையத்தில் வெளியாகி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்த சம்பவம் ரஷ்யாவின் பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கி நகரில் உள்ள மருத்துவமனையில் பதிவாகியுள்ளது.

ரஷ்யாவுக்கு அருகே நேற்று காலை 8.7 மெக்னிடியூட் அளவில் சக்திவாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டது.

மருத்துவமனையில் மருத்துவர்கள், அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்த போது, நில அதிர்வு ஏற்பட்டதால், அவர்கள் ஒரு பெரிய சவாலை எதிர் கொண்டனர்.

இதன்போது மருத்துவர்கள் பதற்றம் அடையாமல் நோயாளிக்குத் தொடர்ந்தும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.



# ரஷ்ய நிலநடுக்கத்திற்கு பிறகு வெடித்து சிதறிய எரிமலை

பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி பேரழிவைத் தொடர்ந்து ரஷ்யாவில் உள்ள கிளைச்செவ்ஸ்கோய் எரிமலை வெடித்துள்ளது.

நேற்று புதன்கிழமை பசிபிக் பெருங்கடலைத் தாக்கிய 8.8 ரிக்டர் அளவிலான பயங்கர நிலநடுக்கத்திற்குப் பிறகு ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள கிளைச்செவ்ஸ்கோய் எரிமலை வெடிக்கத் தொடங்கியது. கடைசியாக ஏப்ரல் 2025 இல் இந்த எரிமலை வெடித்தது.

4,750 மீற்றர் உயரம் கொண்ட கிளைச்செவ்ஸ்காய் உலகின் மிக உயரமான எரிமலைகளில் ஒன்றாகும். இது பிராந்தியத்தின் தலைநகரம் என்று அழைக்கப்படும் பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சட்ஸ்கிக்கு வடக்கே 450 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

1700 ஆம் ஆண்டு முதல் இந்த எரிமலை 50 இற்கும் மேற்பட்ட தடவைகள் வெடித்துள்ளது.



கனடா முரசு
வியாழக்கிழமை | 31/07/2025

**உணவுப் பொருள்களை திருடிய கும்பல் கைது**

குழந்தைகளுக்கான தேவையுடைய உணவுப் பொருள்கள், பேபி ஃபார்முலா, வைட்டமின்கள் ஆகியவற்றை கடைகளிலிருந்து திருடி, அவற்றை போதைப்பொருள்களுடன் பரிமாறும்

02



# செப்டம்பரில் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதற்கு கனடா திட்டம்

**எதிர்வரும் செப்டம்பரில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கனடா அறிவித்துள்ளது.**

**இதன்படி, அண்மைய நாள்களில் இதுபோன்ற அறிவிப்பை வெளியிடும் மூன்றாவது ஜி 7 நாடாகக் கனடா இருக்கும் என்று அந்த நாட்டுப் பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.**

**எனினும், ஹமாஸ் இல்லாமல் அடுத்த ஆண்டு பாலஸ்தீன ஆணைக் குழு தேர்தல்களை நடத்துவது உட்பட ஜனநாயக சீர்திருத்தங்களைச் சார்ந்து, தங்களது நடவடிக்கை இருக்கும் என்று மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

முன்னதாக, இஸ்ரேல் போர்நிறுத்தம் மற்றும் பிற நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் செப்டம்பரில் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாக பிரித்தானியா அறிவித்த ஒரு நாள் கழித்தும், பிரான்ஸ் இதேபோன்ற அறிவிப்பை வெளியிட்ட ஒரு வாரத்திற்குப் பின்னரும், கனடாவின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இதுவரைக்கும் ஐக்கிய நாடுகளின் 193 உறுப்பு நாடுகளில் கிட்டத்தட்ட 150 நாடுகள் பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரித்துள்ளன.

இந்தநிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய குடியேற்றங்களின் விரிவாக்கம், காசாவில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைமை ஆகியவை கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் வியக்கத்தகு மாற்றத்திற்கான காரணங்களாக மார்க் கார்னி மேற்கோள் காட்டியுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய அவர், காசாவில் மனித துன்பங்களின் அளவு தாங்க முடியாதது, அது வேகமாக மோசமடைந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தாம் பாலஸ்தீன அதிகார சபைத் தலைவர் மஹ்மூத் அப்பாஸூடன் கலந்துரையாடியதாகவும் கனேடிய பிரதமர் தெரிவித்துள்ளார்.





# டொரொன்டோ விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கும் போது கோளாறு

டொரொன்டோ பியர்சன் விமான நிலையத்தில் நேற்று காலை ஒரு தனியார் விமானம் தரையிறங்கும் போது அதன் தரையிறக்கும் சக்கரங்களில் கோளாறு ஏற்பட்டது.

இருப்பினும், இதில் யாரும் காயமடையவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் இரு பணியாளர்கள் மட்டுமே இருந்ததாகவும், அவர்கள் பாதுகாப்பாக இருந்ததாகவும், விமானம் தரையிறங்கிய பின்னர் ஓரளவிற்கு ஓடுபாதையில் நகர்ந்து, பின்னர் ஒரு சந்திப்புப் பகுதியில் நின்று விட்டதாகவும் விமான நிலையம் சமூக வலைதளங்களில் வெளியிட் டுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவத்தால் விமான நிலையத்தின் இரண்டு ஓடுபாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. எனினும் மற்ற இரு ஓடுபாதைகள் வழியாக விமானங்கள் வழக்கம்போல பயணங்களை மேற்கொள்கின்றன.

சில விமானங்களுக்கு தாமதம் ஏற்படக்கூடும் என பியர்சன் விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## செப்டம்பரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைந்த குற்றக் குழுவை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பீல் மாகாண பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மிசிசாகா நகரின் மெடோவெல்வ் பகுதியில் போதைப்பொருள் விற்பனை நடப்பதாக செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் போது மருந்துப் பொருள்கள் மற்றும் சிறிய வணிக கடைகளை குறிவைக்கும் திட்டமிட்ட குற்றவாளிகள் குழு செயல்பட்டு வந்தமை கண்டறியப்பட்டது.

சந்தேக நபர்களிடமிருந்து கொகேய்ன் போதைப் பொருள், 30000 டொலர் பெறுமதியான களவாடப்பட்ட பொருள்கள், 34000 டொலர் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்களுக்கு எதிராக 33 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.






# அமெரிக்க பாடகி கேட்டி பெர்ரியுடன் டேட்டிங் செய்கிறார் ஜஸ்டின் ட்ரூடோ

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும், அமெரிக்க பாடகி கேட்டி பெர்ரியும் டேட்டிங் செய்கிறார் என தகவல்கள் பரவி வருகின்றன.

கடந்த 28 ஆம் திகதி ஜஸ்டின் ட்ரூடோவும், அமெரிக்க பிரபல பாடகி கேட்டி பெர்ரியும் உள்ளூர் உணவக மான Le Violonயில் காணப்பட்டனர்.

அங்கு அவர்கள் இருவரும் உண வைப் பகிர்ந்து கொண்டதும், கொக் டெய்ல்களை அனுபவித்ததும் வெளி யான புகைப்படங்கள் மூலம் தெரிய வந்தது.

தற்போது இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலானதால் இருவரும் டேட்டிங் செய்கின்றனர் என தகவல்கள் பரவுகின்றன.

ஆனால், கேட்டி அல்லது ட்ரூடோ வின் தரப்பில் இருந்து இதுகுறித்து எந்தகருத்தும்தெரிவிக்கப்படவில்லை.

இருவரும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை உறுதிப்படுத்திய சிறிது நேரத்திலேயே அவர்களின் சந்திப்பு வந்துள்ளது.

அதாவது, நடிகர் ஆர்லாண்டோ ப்ளூம் உடனான உறவினைத் தொடர்ந்து இருவருக்கும் நிச்சயதார்த் தம் ஆனதை கேட்டி பெர்ரி சமீபத்தில் அறிவித்தார்.

அதேபோல் ஜஸ்டின் ட்ரூடோவைப் பொறுத்தவரை, அவரது மனைவி சோஃபி கிரிகோயரும் 18 ஆண்டு திருமணத்திற்குப் பிறகு 2023 இல் பிரிகின்றார் என தெரிவித்துள் ளது.

# கனடாவில் ட்ரோன்கள் மூலம் போதைப்பொருள் கடத்தல்

கனடாவின் சாஸ்காட்செவான் மாகாணத்தில் உள்ள Saskatchewan Penitentiary சிறைக்குள் ட்ரோன் வழி யாக போதைப்பொருள்கள் கடத்தப் பட்ட சம்பவம் தொடர்பாக மூவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ளன.

சாஸ்காட்செவான் இரகசிய பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர். ஜூலை மாத ஆரம்பத்தில், ட்ரோன் மூலம் போதைப் பொருள் கடத்தப்படலாம் என சாச்காட்செவான் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த 9ஆம் திகதி லாயிட் என்ற கிராமத்தில் உள்ள வீடொன்றில் சோதனை மேற் கொள்ளப்பட்டது.

இந்த சோதனையின் போது 172 கிராம் மெத்தாம்பெட்டமின், 112 கிராம் கஞ்சா அமுக்கப்படுத்திய பாகம், ஒரு ட்ரோன், லேப்டாப், மற்றும் செல் போன்கள் ஆகியவை கைப்பற் றப்பட்டன.



வீட்டில் இருந்த இரு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்ட நிலையில், 36 வயது டைய லேயர்டைச் சேர்ந்த பெண்ணொ ருவருக்கு போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள் ளது. மற்றவர்கள் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கைதான பெண், ஓகஸ்ட் 27 ஆம் திகதி ரொஸ்டெர்ன் மாகாண நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார்.

இந்தச் சம்பவத்தில் போதைப் பொருள்கள் சிறைச்சாலை உள்ளே கொண்டு செல்லாதவாறு பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, கடந்த 13ஆம் திகதி, Prince Albert RCMP இற்கு, ஒரு ட்ரோன் சிறைக்குள் பக்கெட்டொன்றை வீசிய தாக தகவல் கிடைத்தது.

இந்த ட்ரோன், சிறை அருகே நின்ற வாகனமொன்றிலிருந்து இயக் கப்பட்டது என பொலிஸார் தெரிவித் தனர். Lincoln Park Road பகுதியில் சந் தேக வாகனம் கண்டுபிடிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

அதில் இருந்த ஒரு ஆண் மற்றும் பெண் கைது செய்யப்பட்டனர். வாக னத்தில் ட்ரோன் மற்றும் செல் போன் கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், சிறை அருகே விழுந்து நொறுங்கிய மற்றொரு ட்ரோன் மற்றும் சிறைக்குள் விழுந்த பாக்கெட் டும் கைப்பற்றப்பட்டன.

இதில், 60 கிராம் மெத்தாம் போதைப் பெருளும், 30 கிராம் கஞ்சா போதைப் பொருளும் பறிமுதல் செய்யப்பட் டுள்ளது.